9

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 113/ந/2021
நாள். 25.01.2022

திரு.கே.நவுசாத் அலி,
காரைக்குடி. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
காரைக்குடி நகராட்சி. – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, எண். 7, பெரியார் சிலை அருகில் என்ற முகவரியில் வசிக்கும் திரு.கே.நவுசாத் அலி, என்பவரின் 12.11.2021 நாளிட்ட மனு இம்முறைமன்றத்தில் 22.11.2021 அன்று பெறப்பட்டு 113/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, எண். 7, பெரியார் சிலை அருகில் என்ற முகவரியில் வசிக்கும் கே.நவுசாத் அலி, என்பவர் தனது மனுவில்

> “காரைக்குடி நகராட்சியில் காரைக்குடி (630 001) முடியரசன் சாலையில் புதிய நீதிமன்றக் கட்டிடத்திற்கு எதிரில் கட்டிட அனுமதி கோராமல் வீட்டை கட்டி அதில் மல்டி ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடலையும் சென்ற பல்லாண்டுகளாக திரு.ஏ.அறுமுகம் என்பவரின் மகன் டாக்டர் திரு.ஏ.ரமேஷ் என்பவரும் மேற்படி திரு.ஏ.ரமேஷ் மனைவி டாக்டர் கவிதா என்பவரும் கவிதா நர்சிங்ஹோம் என்ற பெயரில் நடத்திவருகிறார்கள். ஆனால் பல வருடம் கழித்து 2016ல் தான் கட்டிட வரைபட அனுமதி கோரி அதுவும் 2016ம் ஆண்டில் மறுக்கப்பட்டுள்ளது (அனுமதி மறுக்கப்பட்ட கட்டிட வரைபடம் என் தரப்பு ஆவணம் 17 ஆகும்). மேலும் மேற்படி கட்டிடத்தை இடித்தகற்றவும் 02.04.2019ல் நகராட்சி உத்தரவிட்டுள்ளது. (இந்த தகவல் தாங்கிய கடிதம் என் தரப்பு ஆவணம் 19) அந்த உத்தரவை இதுவரை செயல்படுத்தவில்லை.

கட்டிட அனுமதி மறுக்கப்பட்ட கட்டிட வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது. நகரளவைப் பதிவேடும், தரையின் வரைபடமும் இணைக்கப்படுகிறது. இடித்தகற்ற உத்தரவான விவரமும் இணைக்கப்பட்டுள்ளது.

நான் எண்ணற்ற ரெப்ரசெண்டேஷன்கள் ஆர்டினரியாகவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திலும் கொடுத்தும் தகவல் தர இழுத்தடிப்புச் செய்து தகவல் ஆணைய உத்தரவுக்குப் பின்னர் கோரிய தகவல்கள் தரப்பட்டுள்ளது.

நகராட்சியின் உத்தரவை செயல்படுத்தி அந்தக் கட்டிடத்தை இடித்தகற்ற நான் பல விண்ணப்பங்கள் செய்தும் காரைக்குடி நகராட்சி ஆணையர் தான் போட்ட உத்தரவையே செயலாக்காமல் இருந்து வருகிறார். அவர் தன் பணிக் கடமையை மீறியும் அலட்சியம் செய்தும் யார் நம்மைக் கேட்கப்போகிறார்கள் என்ற இருமாப்பிலும் தைரியமாக சும்மாயிருந்து வருகின்றார். அவர் தன் கடமையைப் புறக்கணித்ததற்கு அவர் பேரில் நடவடிக்கை வேண்டும்.

நடப்புக்கால மழையில் சென்னை மிதந்தது சம்பந்தமாக உயர்நீதிமன்றம் 2015ல் இதே நிலை ஏற்பட்டது என்றும், அது முதல் இதுவரை சென்னை மாநகராட்சி என்னதான் செய்துகொண்டிருக்கிறது என்றும் கேட்டுள்ளது.

கட்டிடம் சுகாதாரமாக இருக்கவேண்டுமானால் அது பில்டிங் பிளான் அப்ரூவல் பெற்று அந்த பிளான் பிரகாரம் கட்டப்பட்டிருந்தால்தான் அவ்வாறிருக்க முடியும். போதுமான சுகாதார வசதிகளோ, கார் பார்க்கிங்கோ, தீயணைப்பு வசதியோ இல்லாத கட்டிடமாக இருந்து வருகிறது.

இது ஆயிரக் கணக்கான மக்கள் போய்வரக்கூடிய மருத்துவமனையாகும், உள்ளிருக்கும் நோயாளிகளுக்கும், வெளியிலிருந்து வந்து போகும் நோயாளிகளுக்கும் அவர்களுடன் வந்து போவோருக்கும் பெரும் சுகாதாரக் கேட்டை விளைவிக்கும். வைத்தியத்திற்கு வந்து வியாதியை வாங்கிச் செல்வதாக அமையும்.

கட்டிட அனுமதிக்குத் தேவையான அரசு வழிகாட்டியும் இணைத்துள்ளேன். (எனது தரப்பு ஆவணம் 18). இதன் பிரகாரம் கட்டிடம் அமைக்கப்படவில்லை, மருத்துவமனைக்கு வந்த கார் மற்றும் இருசக்கர வாகனங்கள் எல்லாம் தெருவை அடைத்துக்கொண்டு நிற்கிறது. போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனது இந்தப் புகாரில் ஆணையாளர் மீது குற்றம் சுமத்தியிருக்கின்றேன். காரணம் நான் எனது புகார்களை அவருக்குத்தான் அனுப்பியுள்ளேன். அவர்தான் நகராட்சி அலுவலகத்திற்கு presiding officer ஆவார். அவர் தவறுக்கு தான் பொறுப்பில்லை என்று வேறு யாரையேனும் கைகாட்டலாம். எனது குற்றச்சாட்டிற்கு தலைமைப் பொறுப்பு அவர்தான்.

2,3 எதிர்மனுதாரர்களான நகரமைப்பு அதிகாரி மற்றும் சுகாதார அதிகாரி, காரைக்குடி நகராட்சிக்கு எதிரான எனது புகாரைக் களையப் பொறுப்பானவர்கள், எனவே அவர்களுக்கு எதிராகவும் புகார் செய்துள்ளேன்.

மேலும் எனது புகாரின் அடிப்படையில் பாதிக்கப்படுவோர் என்று தாங்கள் கருதும் பட்சத்தில் அவசியமான முறையான பார்ட்டிகள் என்று கருதும் பட்சத்தில் காரைக்குடி 630 001 முடியரசன் சாலையில் உள்ள கவிதா நர்சிங்ஹோம் உரிமையாளர்களான திரு.ஆ.ரமேஷ் (த/பெ.திரு.ஆறுமுகம்) திருமதி. கவிதா (க/பெ.திரு.ஆ.ரமேஷ்) ஆகியோருக்கும் சமன் அனுப்பி விசாரிக்கலாம்.

ஆகவே தங்கள் மேலான சமூகம் கருணை கூர்ந்து இந்தப் புகாரில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக தக்க நடவடிக்கை எடுத்து நீதி செலுத்தப் பிரார்த்திக்கின்றேன்'' என்று தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு 30.11.2021 நாளிட்ட கடிதத்தில் காரைக்குடி நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது. காரைக்குடி நகராட்சி ஆணையாளர் தமது 03.01.2022 நாளிட்ட அறிக்கையில்

- காரைக்குடி நகராட்சி சர்வே வார்டு எண்.03, பிளாக் எண்.31, நகரளவு எண்.1038, மனை எண்.203, 470 குறுக்கம் மனைப்பிரிவில் உள்ள 1197.58 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் கொண்ட நர்சிங் ஹோம் கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் உத்தரவு ந.க.எண்.1650/2006பிஏ1 நாள்.15.03.2006ல் அனுமதி உத்தரவு திருமதி.R.கவிதா மற்றும் திரு.A.ரமேஷ் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- காரைக்குடி நகராட்சி, சர்வே வார்டு எண்.03, பிளாக் எண்.31, நகரளவு எண்.1038, மனை எண்.203, பரப்பளவு 1198 ச.மீ என்ற இடத்தில் ஏற்கனவே நிலையில் இருந்த கட்டிடத்தில், கூடுதலாக இரண்டாவது தளம் 262 ச.மீ பரப்பளவில் கட்டிடம் கட்டிக் கொள்ள, அனுமதி கோரி, திருமதி.R.கவிதா மற்றும் திரு.A.ரமேஷ் ஆகியோர் 18.07.2016ல் நகராட்சிக்கு விண்ணப்பம் அளித்துள்ளனர்.

- காரைக்குடி நகராட்சி அலுவலக ந.க.எண்.347/2016/எப்2, 25.07.2016 ந் தேதிய அறிவிப்பில், உத்தேச கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் தள எண்ணிக்கை உள்ளாட்சிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வுக்கு மேல் அமைவதால், கட்டிட அனுமதி தொடர்பாக, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை மண்டலம் அவர்களுக்கு மேல்முறையீடு செய்யுமாறு தெரிவித்து அனுமதி மறுக்கப்பட்டது.

- காரைக்குடி நகராட்சி, சர்வே வார்டு எண்.03, பிளாக் எண்.31, நகரளவு எண்.1038, மனை எண்.203, பரப்பளவு 1198 ச.மீ என்ற இடத்தில் ஏற்கனவே நிலையில் இருந்த கட்டிடத்தில், கூடுதலாக மூன்றாம் தளம் 283 ச.மீ பரப்பளவில் கட்டிடம் கட்டிக் கொள்ள, அனுமதி கோரி, திருமதி.R.கவிதா மற்றும் திரு.A.ரமேஷ் ஆகியோர் 17.04.2018ல் நகராட்சிக்கு விண்ணப்பம் அளித்துள்ளனர்.

- உத்தேச கட்டிடமானது, மருத்துவமனை உபயோகமாக இருப்பதாலும், மேலும் மூன்றாம் தளமாக இருப்பதாலும், உத்தேச கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் தள எண்ணிக்கை உள்ளாட்சிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வுக்கு மேல் அமைவதால், கட்டிட அனுமதி தொடர்பாக, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை மண்டலம் அவர்களுக்கு மேல்முறையீடு செய்யுமாறு தெரிவித்து, காரைக்குடி நகராட்சியின் ந.க.எண்.111/K1/2/18–19/0000758 நாள்.07.05.2018 ல் அறிவிப்பு மூலம் நிராகரிக்கப்பட்டது.

- காரைக்குடி நகராட்சியின் அலுவலக ந.க.எண்.8/2018.எப்2, நாள்.22.11.2018 ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, 216 (1) & (2) மற்றும் 205 (1 & 2) பிரிவுகளில் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. காரைக்குடி நகராட்சியின் அலுவலக ந.க.எண்.1192/2019/எப்2, நாள்.02.04.2019 ல் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, 56 மற்றும் 57 பிரிவுகளின்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- மனுதாரர் திரு.A.ரமேஷ் என்பவர் கவிதா நர்சிங்ஹோம், காரைக்குடி என்ற இடத்திற்கு, வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்க அருகில் உள்ள இடத்தை ஒப்பந்தம் பேசி வருவதாகவும், அதற்கு காலஅவகாசம் வழங்குமாறு தன்னுடைய 20.06.2019 ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். அதனடிப்படையில் 05.12.2019 ம் தேதிய கடிதத்துடன், ஏற்கனவே நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களிடம் பெறப்பட்ட கட்டிட அனுமதி உத்தரவு நகல், வரைபடம் நகல் மற்றும் சுப்பிரமணியபுரம் தெற்கு, கிழமேல் வீதி, வார்டு எண்.03, நகரளவு எண்.1050, பிளாக் எண்.31, பரப்பளவு 12814 ச.அடி காலியிடத்தில் (கார் பார்க்கிங்) வாகனம் நிறுத்துவதற்கு தேர்வு செய்துள்ளதாக குறிப்பிட்டு, தரை வாடகை ஒப்பந்த பத்திரம், நாள்.01.12.2019ன்படி நகல் இணைத்துள்ளார்.

- மேற்கூறிய மருத்துவமனை கட்டிடத்திற்கு கீழ்கண்ட சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

i) சிவகங்கை இணை இயக்குநர் (மருத்துவம்) அவர்களிடமிருந்து Certificate of Registration of Clinical Establisment என்ற சான்று வழங்கப்பட்டுள்ளது.

ii) தீயணைப்பு அலுவலர், சிவகங்கை அலுவலகத்தில் இருந்து Licence No.20/2021 நாள்.02.02.2021 முதல் 01.02.2022 வரை தடையின்மைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

iii) வட்டாட்சியர், காரைக்குடி நகராட்சி அலுவலக K.Dis.B1/102/2022 நாள்.03.01.2022 License No.01/2022 ல் Building License வழங்கப்பட்டுள்ளது.

iv) நகர்நல அலுவலர் காரைக்குடி நகராட்சி அலுவலக கடிதம் ந.க.எண்.5831/2021/எச்.1, நாள்.30.12.2021 ல் சுகாதார சான்று வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் திரு.கே.நவுசாத் அலி மற்றும் எதிர்மனுதாரரான காரைக்குடி நகராட்சி ஆணையாளர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 12.01.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.01.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

12.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரரான கே.நவுசாத் அலி கலந்து கொள்ளவில்லை காரைக்குடி நகராட்சி ஆணையாளர் 12.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

“காரைக்குடி நகராட்சி வார்டு எண்.3 முடியரசனார் சாலை, பிளாக் 31, மனை எண்.203 ல் இயங்கி வரும் கவிதா மருத்துவமனைக்கான தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கான கட்டட அனுமதி ஆணை 15.03.2006 ல் நகர்

ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தின் இரண்டாவது தளத்தில் கூடுதலாக 262 சதுர மீட்டர் பரப்பளவு கட்டடம் கட்ட மருத்துவமனை நிர்வாகத்தினர் நகராட்சியிடம் அனுமதி கோரியபோது, நகராட்சியின் கடிதம் நாள் 25.07.2016 ல் நகர ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களுக்கு மேல்முறையீடு செய்யுமாறு தெரிவித்து அனுமதி மறுக்கப்பட்டது.

அதே போன்று அக்கட்டடத்தில் 3 மற்றும் 4 ஆம் தளம் கட்டுவதற்கு மருத்துவமனை நிர்வாகம் நகராட்சியில் கோரிய போதும், நகர ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களுக்கு மேல்முறையீடு செய்யுமாறு தெரிவித்து அதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. நகர ஊரமைப்பு இயக்குநர் அலுவலகத்தில் கட்டட அனுமதி பெறாமல் மேற்கண்ட மருத்துவமனை நிர்வாகம் 3 மற்றும் 4 ஆம் தளத்தை கட்டியுள்ளனர். இதற்கு 2019 ஆம் ஆண்டு நகராட்சியின் மூலம் Notice வழங்கப்பட்டது. Notice வழங்கியதைத் தொடர்ந்து மருத்துவமனை கட்டடத்தை Lock and seal செய்வதற்கு காரைக்குடி நகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடந்த 1½ மாதங்களுக்கு முன்புதான் ஆணையராக பொறுப்பேற்றுள்ள நிலையில், இந்நேர்வினை ஆய்வு செய்து, மேற்கண்ட அனுமதியற்ற மருத்துவமனைக்கு விதிகளின்படி உரிய காலத்திற்குள் Lock and seal Notice அனுப்பிடவும், அதனைத் தொடர்ந்து prosecution நடவடிக்கையும் காரைக்குடி நகராட்சியால் விரைவில் எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

4) இந்நேர்வில் மனுதாரரின் மனு காரைக்குடி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. காரைக்குடி நகராட்சி வார்டு எண்.3 முடியரசன் சாலையில் இயங்கிவரும் கவிதா மருத்துவமனைக்கு தரைதளம் முதல்தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கு அதன் உரிமையாளரால் 15.03.2006ல் நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களிடம் கட்டட அனுமதி பெறப்பட்டு மருத்துவமனை நிர்வாகத்தால் 3 மற்றும் 4 ஆம் தளம் கட்டுவதற்கு அனுமதி கோரியதற்கு உள்ளாட்சி அமைப்பிறகு வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்விற்கு மேல் அமைவதால் கட்டிட அனுமதியை நகர ஊரமைப்பு துணை இயக்குநர் சிவகங்கை அவர்களுக்கு மேல் முறையீடு செய்து கொள்ளுமாறு 2016 மற்றும் 2018 ல் அனுமதியை மறுத்துள்ள நகராட்சி நிர்வாகம் அதன்பிறகு எந்தவித நடவடிக்கையையும் சட்ட விதிகளின் படி மேற்கொண்டதாக தெரியவில்லை நகராட்சி நிர்வாகம் 2018 ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்படி ஒரு அறிவிப்பும் 2019ல் தமிழ்நாடு ஊரமைப்பு சட்டப்படி ஒரு அறிவிப்பும் வழங்கியதோடு நிறுத்திக் கொண்டது.

5) மருத்துவமனை உரிமைதாரர் 3 மற்றும் 4 வது தளத்திற்கு நகர ஊரமைப்பு துணை இயக்குநரிடம் அனுமதி பெற்றாரா என்பதை கவனிக்காமல் 3 மற்றும் 4வது தளம் கட்டி முடிக்கப்படும் வரை எந்தவிதமான சட்ட பூர்வமான நடவடிக்கையையும் மேற்கொள்ளாத நகராட்சி நிர்வாகத்தின் மெத்தனப் போக்கை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. 2019 ஆம் ஆண்டு நகராட்சி மூலம் அறிவிப்பு வழங்கியதை தொடர்ந்து மருத்துவமனை கட்டிடத்தை உரிய விதிகளின்படி உரிய காலத்திற்குள் Lock and seal prosecution நடவடிக்கை போன்ற எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாத சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் இந்நேர்வில் மருத்துவமனையை ஆய்வு செய்து அனுமதியில்லாமல் கூடுதலாக தளங்கள் கட்டப்பட்டிருப்பதால் அவற்றை விதிகளின்படி, அறிவிப்பு வழங்குதல், கட்டிடத்தை பூட்டி சீல் இடுதல் (Lock and seal) மற்றும்

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்துதல் போன்ற தொடர் நடவடிக்கையை உடனே மேற்கொள்ளுமாறு நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) கே.நவுசாத் அலி,
7, பெரியார் சிலை அருகில்,
காரைக்குடி 630 001,
சிவகங்கை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
காரைக்குடி நகராட்சி,
காரைக்குடி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்
முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.
02/02/22

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை

02/02/22